


ஈரோட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் எஸ்.முத்துசாமி உள்ளார்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (19.12.2024) மாலை, ஈரோட்டில் நடைபெற்ற 'ஈரோடு மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகளுடனான சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.



ஈரோட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இனமானப் பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.முத்துசாமி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோடு, முத்து மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.சி.சந்திரகுமார் அவர்களின் மகள் டாக்டர் ருசிதாஸ்ரீ – அவினாஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், கு.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம், சி.சரஸ்வதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோடு விருந்தினர் இல்லத்தில், "கிரீன் ஈரோடு" அமைப்பின் தலைவர் அப்துல்லா சந்தித்து, "மரம் வளர்ப்போம், நாட்டைக் காப்போம்" திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம் முழுவதும் 1 இலட்சம் மரக்கன்றுகள் நட்டுவருவதையொட்டி, மரக்கன்றினை வழங்கினார். உடன் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் "கிரீன் ஈரோடு" அமைப்பின் நிருவாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோடு விருந்தினர் இல்லத்தில், நலம் புனர்வாழ்வு மையத்தின் சிறப்பு குழந்தைகளுடன் உரையாடி அவர்களுக்கு இனிப்புகளை வழங்கினார். உடன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, நலம் புனர்வாழ்வு மையத்தின் செயல்வழி மருத்துவர் தெ.பரிமளா குமார் மற்றும் நிருவாகிகள் உள்ளனர்.



புதுடெல்லியில் வில்சன் எம்.பி. தலைமையில் நடந்த கிறிஸ்துமஸ் விழாவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.பி.க்கள் வைகோ, கே.ஆர்.என்.இராஜேஷ்குமார், இரா.கிரிராஜன் மற்றும் வெளிநாட்டு தூதர்கள் கலந்து கொண்டனர்.




திராவிட பாரம்பரியமும் தேசிய சிந்தனையும் கொண்ட
முன்னாள் மத்திய அமைச்சர், முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்
ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர்
எனது தன்மானத் தந்தை
தெய்வத்திரு. E.V.K.S.இளங்கோவன் அவர்களுக்கு
முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய அரசு உத்தரவை பிறப்பித்து பெருமை சேர்த்த
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
திருமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு
எங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்
நன்றி! நன்றி!! நன்றி!!!

தேசிய கவிஞர் கலைமாமணி கவி காமு ஷெரிப் அவர்களின் பேரன்
கவி காமு A.V.M.ஷெரிப்
மாநில செயலாளர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி